1972 மார்ச் 11]

ஓட்டப்பிடாரத்திலுள்ள துணைத் தாசில்தார் அலுவலகக் கட்டடம்.

*444. வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ஓட்டப் பிடாரத்தில் சப்-தாலுக்கா ஆபீஸ் ஒன்று வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவது உண்மையா ?

(இ) ஆம் எனின், அதற்கு எப்போது தனிக்கட்டடம் கட்ட அரசு ஏற்பாடு செய்யும் ?

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா : (அ) ஓட்டப் பிடாரத்திலுள்ள துணைத்தாசில்தார் அலுவலகம் வாடகையில்லாத் தனியார் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

(இ) அந்தத் துணைக்கோட்ட அலுவலகத்திற்கு கட்டிடம் கட்டும் கருத்துரு ஒன்று விரைவில் சமர்ப்பிக்கப்படுமென திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார்.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, அந்த வாடகைக் கட்டிடத்திற்கு வாடகையாக அரசு வருஷம் ஒன்றுக்கு எவ்வளவு கொடுக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் சொன்ன பதிலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். வாடகை இல்லாமல் தனியார் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : வாடகை இல்லாமல் தனியார் ஒருவர் அரசாங்கத்திற்கு கட்டடத்தைக் கொடுக்கக்கூடிய அந்த தாராள சிந்தை உடையவரிடம் இருந்து அரசாங்கம் இலவசமாக அந்தக் கட்டடத்தை பெற்றுக்கொள்ளுமா ? எந்தெந்த மாவட்டங் களிலே தாலுகா ஆபீஸ்கள், கலெக்டர் ஆபீஸ்கள் தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன ? எந்தெந்த இடங்களில் அரசாங்கக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன என்ற புள்ளி விவரத்தை அறிய பொதுப்பணித் துறையில் ஒரு குழு அமைக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : புள்ளிவிவரங்கள் இப்போது இல்லை. ஆனல் இந்த ஒட்டப்பிடாரத்தில் உள்ள கட்டடம், திரு. டி. எஸ். கிருஷ்ணன் நாயர் அவர்களால் வாடகை இல்லாமல் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாநிலம் பூராவிலும் உள்ள அரசாங்க அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

Distribution of water from Pandravedu tank

* 445 Q.—THIRU E. S. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal for construction of masonry distribution of water from Pandravedu tank to Kesavarajakuppam village ayacuts in Pallipet Sub-taluk in Chingleput district and

(b) if so, the value of the estimates

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 33,000.

சூலூருக்கு சிறப்பு அங்காடி.

* 446 வினு—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மக்களுக்கு மலிவு விலையில் பொருள்கள் கிடைக்க வழி செய்ய சூலூரிலும் பல்லடத்திலும் கூட்டுறவு சிறப்பு அங்காடிகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையி லுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இல்லை.

சித்தர்க் காட்டிலுள்ள நவீன அரிசி ஆலை

* 447. வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் சித்தர்க் காட்டிலுள்ள நவீன அரிசி ஆலை எப்போது செயல்படத் துவங்கும்?